ESIOP. 3/2023
04-12-2023

P.W.1 மணிகண்டன்
குறுக்கு விசாரணை (3-வது எதிர்மனுதாரர் தரப்பு)

விபத்து நடந்த பிறகு உங்கள் சிகிச்சை சம்பந்தமாக ESI கழகத்தில் யார் யாரிடம் பணம் சம்பந்தமாக தொடர்பு கொண்டீர்கள் என்றால் ESI பெரியமிளகுபாறை அலுவலகம், மன்னார்புரத்தில் இருக்கும் ESI மண்டல அலுவலகம், 10 வது கிராஸ்சில் இருக்கும் ESI அலுவலகம் ஆகியோரை தொடர்வை கொண்டேன். Regional Administration Medical Office -அதில் இதுவரை மனு கொடுத்துள்ளீர்களா என்றால் அந்த அலுவலகத்தை தான் 10 வது கிராஸ்சில் இருக்கும் ESI அலுவலகம் என்று நான் குறிப்பிட்டுள்ளேன். வழக்கு சம்பந்தமாக Regional Administration Medical Officer-க்கு அறிவிப்பு அனுப்பியிருந்தீர்கள் அதை தவிர வேறு எதாவது மனு கொடுத்துள்ளீர்களா என்றால் தொலைபேசியில் பேசினோம் அதை தவிர நேரில் சென்று பார்த்தோம் கடிதம் எதுவும் கொடுக்க கூடாது என்று சொல்லிவிட்டார்கள். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 54 ஆவணங்களையும் Regional Administration Medical Office-ல் ஒப்படைத்தீர்களா என்றால் ஒப்படைத்தேன். ESI Regional அலுவலகம் சேலத்தில் தான் உள்ளது அவர்களுடன் தான் நீங்கள் தொடர்பில் உள்ளீர்கள் என்றால் சரியல்ல ஏனென்றால் சேலம் செல்ல வேண்டும் என்றால் 10 வது கிராஸ்சில் இருக்கும் ESI அலுவலகம் சொன்னால் தான் செல்ல முடியும் என்று அந்த அலுவலகத்தில் சொன்னார்கள். நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் மிளகுப்பாறை மற்றும் சேலத்தில் இருக்கும் அலுவலகம் தவிர வேறு யாருக்கும் அனுப்பவில்லை என்றால் சரி, ஏனென்றால் 10 வது கிராஸ்சில் இருக்கும் ESI அலுவலகம் அப்படித்தான் சொன்னார்கள்.

நீங்கள் கொடுத்த மனு மற்றும் ஆவணங்களுக்கு ESI Regional Office- சேலத்தில் இருந்து ஏதாவது பதில் பெற்றீர்களா என்றால் இல்லை.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**தலைமை தாங்கும் அதிகாரி,**
**தொழிலாளர் நீதிமன்றம்,**
**திருச்சி**

webcopy